# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **37**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

# ‘திராவிட லெனின்’ டி.எம்.நாயர்!



**இடஒதுக்கீட்டுக் கொள்கையில், இந்தியாவுக்கு வழிகாட்டும் வகையில், தமிழ்நாடு திகழ்வதற்கு முக்கியக் காரணம் கடந்த நூற்றாண்டில் நீதிக்கட்சியின் மிகத் தெளிவான முன்னெடுப்புகள். அவ்வகையில், நீதிக்கட்சியின் தூண்களில் மிக முக்கியமானவரான தாரவாட் மாதவன் நாயர் பங்களிப்பை இக்கட்டுரையில் நினைவுகூர்வோம்.**

**‘திராவிட லெனின்’** என்றும், **‘புரட்சி வீரர்’** என்றும் தந்தை பெரியார் அழைத்த, 1868-இல் கேரளத்தில் பிறந்து, சென்னையிலும் பிரிட்டனிலும் பாரீசிலும் மருத்துவம் பயின்று, சென்னையில் பெரும்பகுதி வாழ்நாளைக் கழித்து, 1919-இல் இலண்டனில் இறந்த தாரவாட் மாதவன் நாயர் எனும் டாக்டர் டி.எம்.நாயரின் பங்கின்றி, பார்ப்பனரல்லாத மக்களுக்குக் கல்வியிலும் வேலையிலும் அரசியலிலும் உரிமை தந்திட்ட, வகுப்புவாரி ஆணை நிறைவேறி இருக்காது.

இங்கிலாந்தில் இருந்த காலத்தில், ‘பிரிட்டன் மருத்துவச் சங்கம்’, ‘ராயல் ஆசியச் சங்கம்’, ‘தேசிய முற்போக்குக் குழு’, ‘ராயல் மன்றம்’, ‘எடின்பர்க் பல்கலைக் கழக மாணவர் உறுப்பினர் அவை, உள்ளிட்ட பல்வேறு சமூக அமைப்புகளில் இணைந்து செயல்பட்டார். மருத்துவத் தொழிலுடன் ‘ஆன்ட்டிசெப்டிக்’ என்ற மருத்துவ இதழை 16 ஆண்டுகள் நடத்தினார்.

காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் பயிற்சி பெற்று சிறந்த மருத்துவராக விளங்கிய டி.எம்.நாயர் அறுவைச் சிகிச்சைக் கருவிகளோடும் மருந்துகளோடும் நின்றுவிடவில்லை. சமூக மருத்துவராகவும் விளங்க ஆர்வம் கொண்ட அவர் காங்கிரசில் இணைந்து செயல்பட்டார். காங்கிரஸ் கட்சியின் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். 1904-ஆம் ஆண்டு முதல் 1916-ஆம் ஆண்டு வரை 12 ஆண்டுகள் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகப் பணியாற்றினார்.

## ‘ஜஸ்டிஸ்’ ஆசிரியர்

பார்ப்பனரல்லாத மக்களின் நலன்களுக்கு எதிராக, காங்கிரஸ் செயல்படுவதை உணர்ந்த நாயர், பிட்டி தியாகராயர், டாக்டர் நடேசன் ஆகியோருடன் இணைந்து பார்ப்பனரல்லாத மக்களின் உரிமையைக் காக்க, **‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’** கண்டார். ‘தென்னிந்திய நல உரிமைச் சங்க’த்தின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசெல்ல துவங்கப்பட்ட ஆங்கில இதழான **‘ஜஸ்டிஸ்’** இதழின் ஆசிரியர் பொறுப்பையும் நாயர் ஏற்று நடத்தினார். “வருகின்ற விடுதலை அக்கிரகாரங்களோடு நில்லாமல், எங்கள் வீதிகளுக்கும் வரட்டும்” என்று மிகத் தெளிவான முழக்கங்களோடு ‘ஜஸ்டிஸ்’ இதழ் பார்ப்பனரல்லாதாரின் உரிமைக்குரலை முன்வைத்து இயங்கியது.

சட்டமன்றங்களிலும், அரசு வேலைகளிலும், கல்வியிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும் என்ற திராவிட இயக்கத்தின் சமூகநீதிக் கோரிக்கைகளை முன்வைத்து, வெளியான பார்ப்பனரல்லாத மக்களின் உரிமைக் குரலாக விளங்கும் பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கையை உருவாக்கியவர் டி.எம்.நாயர். தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்ததும் டி.எம்.நாயரே.

மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கை வெளியிடப்படும் முன், ‘பார்ப்பனரல்லாதாருக்கு தனி இடஒதுக்கீட்டுடன் கூடிய அரசியல் சீர்திருத்தம் தேவை’ என்ற கோரிக்கையுடன் டாக்டர் நாயர், நடேசனார் உள்ளிட்டோர் தியாகராயர் தலைமையில், மாண்டேகு-செம்ஸ்போர்டை சந்தித்து விண்ணப்பம் அளித்தனர். இருப்பினும், பார்ப்பனரல்லாத மக்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டதால், டி.எம். நாயர் உள்ளிட்ட நீதிக்கட்சித் தலைவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

பார்ப்பனரல்லாத மக்களின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை மறுத்த மாண்டேகு-செம்ஸ்போர்டு நியமித்த ‘சவுத் ப்ரோ’ குழுவைப் புறக்கணித்து, இங்கிலாந்து சென்று வாதிடுவதுதான் வகுப்புரிமை பெற நம்முன் உள்ள ஒரே வழி என்று முடிவுசெய்து, உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் இலண்டன் சென்றார் நாயர். கப்பலில் பயணித்து, லண்டனில் இறங்கிய நாயரிடம், “இந்தியா திரும்பும் வரை இங்கிலாந்தில் எவ்வித அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது” என்ற தடை உத்தரவு தரப்பட்டது.

நாயருக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அறிந்த தியாகராயர், சென்னையில் பல கண்டனக் கூட்டங்களை ஏற்பாடு செய்து, எதிர்ப்பு உணர்வைத் திரட்டினார். லண்டனில் இருந்த சைடன்காம், லே மிங்டன் போன்ற ஆங்கிலேயர்கள் நாயருக்கு ஆதரவாக நின்றனர். விளைவாக, நாயருக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நீக்கப்பட்டது.

**நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் முன், நேரில் தன் கட்சியின் கொள்கைகளையும், கோரிக்கைகளையும் எடுத்துரைத்து, பார்ப்பனரல்லாதாரின் பிரதிநிதித்துவத்தை நிலைநாட்டும் முயற்சியில் அல்லும் பகலும் செயல்பட்டார் நாயர்.**

## பிரிட்டனில் முழக்கம்

பிரிட்டன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 2.10.1918 அன்று நாயர் உரையாற்றினார். அவ்வுரையில் மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கையின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, வகுப்புரிமைக் கோரிக்கையை ஆழமாக முன்வைத்தார். “வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஏற்று, அதற்கேற்ப அரசியல் சீர்திருத்தம் செய்வதுதான் சென்னை மாகாணத்தில் நிலவி வரும் நோய்களை ஒழிக்கும் மருந்து” என்று முழங்கினார். “வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாத அரசியல் சீர்திருத்தம் தோல்வியைத் தழுவும்” என்று உரத்துக் கூறினார்.

1909-இல் இஸ்லாமியருக்கு வழங்கப்பட்டதைப் போலவே, பார்ப்பனரல்லாதாருக்கும் வகுப்புவாரி இடஒதுக்கீடு வழங்கப்பட்டால்தான் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு, பார்ப்பனரல்லாத மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்தை மிகத் தெளிவாக, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.

இந்திய அரசியல்வாதிகள் பலரை நேருக்கு நேர் சந்தித்து, அவர்களுடைய கருத்துகளையும் யோசனைகளையும் அறிந்துகொண்டால், இந்திய அரசியல் முன்னேற்றத்திற்கு ஏற்றதொரு அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைக்க முடியும் என்று நாயர் கருதினார். அவ்வாறு செய்யாததால் மாண்டேகு - செம்ஸ்போர்டு குழு இந்தியாவின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலாமல் தோற்றுவிட்டது என இங்கிலாந்திலிருந்து வெளிவந்த **‘ஸ்பெக்டேட்டர்’** இதழில் எழுதினார்.

நாயர் இந்தியா திரும்பும் வழியில் பெல்காம், தார்வார் உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று அங்கெல்லாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டினார். சென்னை திரும்பிய நாயரை ஆயிரக்கணக்கான மக்கள் கூடி வரவேற்றனர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கை சாத்தியமாகும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் சென்னை திரும்பிய நாயருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

16.5.1919 அன்று இந்தியத் துறை அமைச்சருக்கும் வைசிராய்க்கும் **‘சவுத் பரோ குழு’** அனுப்பிய அறிக்கையில் பார்ப்பனரல்லாதாருக்கு எவ்வித வகுப்புரிமைப் பிரதிநிதித்துவமும் வழங்கப்படவில்லை. வாக்குரிமைக் குழுவினால் பார்ப்பனரல்லாத மக்களுக்கு எவ்விதப் பலனும் ஏற்படாது என்பதை உணர்ந்த நீதிக்கட்சித் தலைவர்கள் மீண்டும் இங்கிலாந்து சென்று, அங்கு தம் கோரிக்கையை முன்வைப்பது என்று முடிவெடுத்தனர். மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கையும், சவுத் ப்ரோ குழு அறிக்கையும் இங்கிலாந்து நாடாளுமன்றக் கூட்டுத் தேர்வுக் குழுவின் இறுதி முடிவிற்காகக் காத்திருந்தன. எனவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையின் அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்த நீதிக்கட்சியின் சார்பாக, டாக்டர் டி.எம்.நாயர், கே.வி.ரெட்டி நாயுடு, ஆற்காடு இராமசாமி முதலியார் உள்ளிட்டோர் லண்டன் செல்ல முனைந்தனர். இவர்கள் அனைவருக்கும் முன்னதாகவே நாயர் புறப்பட்டுச் சென்றார்.

நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் முன், நேரில் தன் கட்சியின் கொள்கைகளையும், கோரிக்கைகளையும் எடுத்துரைத்து, பார்ப்பனரல்லாதாரின் பிரதிநிதித்துவத்தை நிலைநாட்டும் முயற்சியில் அல்லும் பகலும் செயல்பட்டார் நாயர். இருப்பினும், காலம் வேறு முடிவு செய்துவிட்டது. சாட்சியம் கொடுக்கவேண்டிய ஜூலை 18-ஆம் தேதிக்கு முதல் நாளே நாயர் உடல்நலக்குறைவால் இவ்வுலகை விட்டு நீங்கினார். நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்து, வகுப்புவாரி ஆணை வெளியாகும் முன், நாயர் மறைந்தாலும், அவரின் வாழ்வே வகுப்புவாரி ஆணைக்குத் தொடக்க விதையாக அமைந்தது.

**...குரல் ஒலிக்கும்**

## காவிக் களமாகும் கல்வி நிறுவனங்கள்!




ராஜஸ்தான் மாநிலத்தில், முதல்வர் பஜன்லால் ஷர்மா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், அந்த மாநிலத்தின் அரசுக் கல்லூரிகளின் கட்டடங்கள் மற்றும் நுழைவுவாயில் பகுதிகள் ஆகியவற்றை காவி வண்ணத்துக்கு மாற்றுவதற்கு, ராஜஸ்தான் கல்லூரிக் கல்வி ஆணையரகம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கு அந்த மாநிலத்தின் எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. குறிப்பாக, கல்வித்துறையைக் காவிமயமாக்க பா.ஜ.க. செய்யும் முயற்சிகளின் முதற்படி என விமர்சனம் செய்துள்ளது. ஒன்றிய அரசின், குடும்பநல அமைச்சகத்தின் வழி செயல்படுத்தப்படும், ‘காயகல்ப்’ திட்டத்தின் கீழ் பொது சுகாதார வசதிகளில் தூய்மை, தொற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு, கல்லூரிகளின் வண்ணத்தைக் காவிக்கு மாற்றி வருகின்றனர். முதற்கட்டமாக 20 கல்லூரிகளுக்குக் காவி வண்ணம் பூசப்பட்டுள்ளது.

‘தேசியக் கல்விக் கொள்கை என்கிற பெயரிலான காவிக் கொள்கையைச் செயல்படுத்தத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, கல்வி நிறுவனங்களின் வெளிப்புறத்தையும் காவியாக்கும் முயற்சி’ என விமர்சனங்கள் எழுந்துள்ளன. கல்வி நிறுவனங்களைக் காவிக் களமாக்கும் பா.ஜ.க. அரசுக்குக் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

## :ப்ளாஷ்பேக்



### சாலையைக் கடந்து வந்து வாழ்த்திய தலைவர்!



அமல்ராஜ் - மெட்டோனா மேரி

1996-ஆம் ஆண்டு எங்களுடைய இணையேற்பு விழா அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக அழைப்பிதழ் வைக்கச் சென்ற போது, ‘திருமணம் என்ன நேரத்துக்கு?’ எனக் கேட்டார். காலை 11:00 மணி என்றேன், திருமணத்தன்று அவர் காலை 10:55-க்கே திருமணம் நடைபெறும் அரங்கத்திற்கு வந்து விட்டார். அரங்கத்திற்கு எதிரே இருக்கும் தேவாலயத்தில் நாங்கள் இருப்பதைப் பார்த்து, அவர் சாலையைக் கடந்து வந்து எங்களை வாழ்த்தியது, என் வாழ்க்கையில் இன்று வரை மறக்கமுடியாத நிகழ்வாக இருக்கிறது.

**- அமல்ராஜ் - மெட்டோனா மேரி, மயிலாப்பூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சமரசமில்லா வடவர் எதிர்ப்பு!

1940-ஆம் ஆண்டு செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் சென்னை, சேத்துப்பட்டு, ஸ்பர்டாங் சாலையில் நடைபெற்ற கூட்டத்தில், பெரியார் பேசினார். அந்தக் கூட்டத்துக்கு ஏ.பி.பாத்ரோ தலைமை தாங்கினார். கூட்டத்தில், பெரியார், இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் பக்கம், நாம் இருப்பதை வலியுறுத்தினார். பிரிட்டிஷாரை ஆதரித்து வந்த அவர், வட நாட்டு எதிர்ப்பைக் கடுமையாகத் தொடங்கினார். சென்னை நிகழ்ச்சிக்குப் பின்னர், உடல் நலம் குன்றிய நிலையில் ஈரோடு திரும்பினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**658**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131